
# திராவிடத்தால் வாழ்கிறோம்

774

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

54

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

‘சனாதனத்தை ஒழிப்போம்’ என்று தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியபோது நாடெங்கும் இருந்து மதவாதிகள் கொந்தளித்தார்கள்; வழக்குகள் தொடுத்தார்கள்; அவரது உருவப்படத்தை கொளுத்தினார்கள்; தலைக்கு விலை நிர்ணயித்தார்கள். ஆனால், “சனாதனம் ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்துகிறது. அந்த ஏற்றத்தாழ்வு கூடாது, ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் கொள்கை, அதில் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்” என்று உறுதியாக நின்றார் துணை முதலமைச்சர். தி.மு.கழகத்திற்கு இந்தத் தெளிவும் துணிவும் இன்று வந்ததல்ல, அது கழகத்தின் பிறப்பில் ஊன்றப்பட்ட கொள்கை உரம்.

பேரறிஞர் அண்ணா அத்தகைய கொள்கை உரத்தைப் பாய்ச்சிய மாநாடுகளில் ஒன்றுதான் தஞ்சை மாவட்ட 2-ஆவது மாநாடு. 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 10, 11 ஆகிய 2 நாட்கள், முத்தமிழ் வள்ளல் ஏ.ஒய்.ஏ.நாடார் தோட்டத்தில் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாட்டை பேராசிரியர் க.அன்பழகன் தொடங்கிவைக்க, கோவிந்தசாமி தலைமையேற்றார். 2-ஆம் நாள் அரசியல் மாநாட்டை ஈ.வெ.கி. சம்பத் தொடங்கிவைக்க,

ஓவியம் : சிகரன்




## சராசரி கட்சியல்ல தி.மு.கழகம்!

என்.வி.நடராசன் தலைமையேற்றார். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக கே.கே.நீலமேகம், செயலாளராக ஏ.வி.பதி, பொருளாளராக எஸ்.பெத்தண்ணா ஆகியோர் பணியாற்றினர்.

இரண்டு நாள்களும் சிதம்பரம் எஸ்.ஜெயராமன் அவர்களின் இன்னிசையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. முதல் நாள் இரவு அறிஞர் அண்ணா எழுதிய ‘காதல் ஜோதி’ நாடகமும், 2-வது நாள் ‘ஓர் இரவு’ நாடகமும் நடைபெற்றன. கழகத்தின் முன்னணி நிர்வாகிகள் பலரும் தனித்தனி தலைப்புகளில் அனல் பறக்க இரு நாள்களிலும் உரையாற்றினர். தி.மு.கழகம் என்றால் என்ன, அது எப்படிப்பட்ட இயக்கம் என்பதற்கான விடை தேடுவோருக்கான பதிலை இச்சமூக சீர்திருத்த மாநாட்டில் வழங்கினார் அண்ணா.

“இங்கு நிலவுகிற வர்ணாசிரமக் கொடுமைகளையும் சாதி அழுக்குகளையும், மத நம்பிக்கைகளையும் எடுத்துச் சொன்னால் எங்கே ஓட்டுப் பெட்டிகள் நிரம்பாதோ என்ற கிலியினால் பலர் சொல்வதில்லை. கம்யூனிஸ்டு நண்பர்கள் பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி பாகுபாட்டை ஒழித்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்பார்கள். ஆனால் நாம்தான் - திராவிட இயக்கம்தான் வைதீகப்பற்று வைப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் நமக்கு வாக்கு அளித்தாலும் அளிக்காவிட்டாலும்; ஆதரித்தாலும் சரி, எதிர்த்தாலும் சரி, உள்ள உரத்தோடு அஞ்சாமல் கூறுகின்றோம். சமுதாயத்தில் உள்ள வளைவு நெளிவுகளை நிமிர்த்தவும், தூசு மாசுகளைப் போக்கவும், இந்தச் சமுதாயத்தின் அமைப்பு முறை மாற்றப்படுதல் வேண்டும் என்று! நண்பர்கள்கூட இதைச் சமூக சீர்திருத்த மாநாடு என்றுதான் கூறுவார்கள். ஆனால், இம்மாநாடு *(Social Reconstruction Conference)* சமூகத்தைத் திருத்தி அமைக்கும் மாநாடு என்று நான் சொல்லுகிறேன்!” என முழங்கினார்.

அண்ணாவின் அன்றைய கொள்கை முழக்கத்தின் நீட்சியே, இயக்கத்தின் நாளைய தொடர்ச்சியின் இன்றைய வீச்சு!

...கூட்டம் திரளும்

## அகஸ்தியர் புராணங்கள் மங்கிப்போனது!

செம்மொழித் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அகத்தியர் குறித்த ஆய்வரங்கு நடத்தி, புராணங்களை வரலாறு என்று நம்ப வைக்க முயற்சியை செய்து வருகிறது. இந்நிலையில் ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் 'அகஸ்தியர் ஒரு மீள்பார்வை' என்கிற ஆய்வரங்கத்தை நடத்தியுள்ளது. அதில் சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் நிகழ்த்திய உரை குறித்து எழுத்தாளர் அர்ஷ் முகநூல் பதிவிட்டுள்ளார்.

“அகஸ்தியர் ஒருவரா, பலரா என்ற விவாதம் புராணக் கதைகளால் உந்தப்பட்டுத் தெளிவற்ற நிலையிலேயே உள்ளது. ஒரு சாரார், அகஸ்தியர் ஒருவரே என்றும், அவர் தமிழ் இலக்கணத்தை வகுத்தவர், ‘அகத்தியம்’ எனும் முதல் இலக்கண நூலை இயற்றியவர் என்றும் நம்புகின்றனர். ஓர் இடத்தில் அவர் மருந்துகளைக் கண்டுபிடித்த முனிவராகவும், மற்றொரு இடத்தில் சித்தராகவும், வேறு சில இடங்களில் வேதங்களை இயற்றியவராகவும் சித்தரிக்கப்படுகிறார். சிறிய முனிவராகக் கருதப்பட்டவர், பின்னர் அண்டத்தையே குடித்தவராக வர்ணிக்கப்படுகிறார்.

ஆனால் தொல்காப்பியமே மூல இலக்கண நூல் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இந்த முரண்பாடுகள் காரணமாக, அகஸ்தியர் குறித்த எந்தக் கருத்தையும் நேரடியாக ஏற்றுக்கொள்வது கடினம். அவருடைய பெயரில் உள்ள நூல்களின் காலமும் சரியாகக் கணிக்கப்படவில்லை. அவரின் பெயரில் பல நூல்கள் இருந்தாலும், அவை அவரால் எழுதப்பட்டவை என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இல்லை.

எனவே, அகஸ்தியர் குறித்த தகவல்களை ஆய்வுகளின் அடிப்படையில்தான் அணுக வேண்டும். தொன்மக் கதைகளை வரலாற்று ஆதாரங்களுடன் ஒப்பிட்டு, பகுத்தறிவின் அடிப்படையில் ஆராய வேண்டும். புராணங்களை உணர்ச்சிப்பூர்வமாக அணுகாமல், அறிவியல் பார்வையில் ஆராய வேண்டும். ஆதாரங்கள் இல்லாமல் வரலாற்று நபர்களை உருவாக்குவது அறிவியலுக்கு எதிரானது என ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் அறிவுப்பூர்வமான வாதங்கள், அகஸ்தியர் குறித்த பல தொன்மங்களையும், வாய்மொழித் தோற்றங்களையும் வலுவிழக்கச் செய்தன” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### வாஞ்சையுடன் பேராசிரியர் தந்த ஆலோசனை!



அருள்செல்வன் ராமதாசன்

என் தந்தை உட்கோட்டை ராமதாசன், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் மூத்த முன்னோடி. மாவட்டப் பிரதிநிதியாக இருந்தார். அவரது மறைவுக்குப் பின், படத்திறப்பு நிகழ்வும் கழகக் கொடியேற்ற நிகழ்வும் மாவட்டச் செயலாளர், இன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் எஸ்.எஸ். சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு, பேராசிரியரை அழைக்க விரும்பினோம், அப்போது, அவர் உடல் நலம் குன்றியதால் வர இயலவில்லை. பின்னர் உடல் நலம் சரியானதும் என்னை வீட்டுக்கு அழைத்து, அப்பாவுடனான நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு, மிகுந்த வாஞ்சையுடன் எனக்கும் ஆலோசனைகள் வழங்கினார். 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ஆம் தேதி நடந்த, அந்த சந்திப்பு என்றென்றைக்கும் மறக்கமுடியாத நிகழ்வு.

– அருள்செல்வன் ராமதாசன், கிளைச் செயலாளர், உட்கோட்டை, ஜெயங்கொண்டம் ஒன்றியம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

54

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

‘நம் நெறி குறள் நெறி, நம் மதம் குறள் மதம்’ என்றார் தந்தை பெரியார், அத்தகைய சிறப்புகொண்ட திருக்குறளை நமக்கு வழங்கிய திருவள்ளுவரின் புகழை, சிலை அமைத்து நிலைக்கச் செய்தவர்கள் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும்.

1968-இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடர்ந்து சென்னையில் அமைக்கப்பட்ட 10 தமிழறிஞர்கள் சிலைகளுள் வள்ளுவர் சிலையும் ஒன்று. அதே போல் இரண்டாயிரத்தின் தொடக்க நாளில், தமிழ்நாட்டின் தென்முனையான குமரியில் 133 அடியில் பிரம்மாண்டமான வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். உலகிலேயே ஒரு இலக்கியவாதிக்கு அமைக்கப்பட்ட சிலைகளுள் கலைஞர் அமைத்த வள்ளுவர் சிலைதான் உயரமானது.




## சிலை போற்றும் மலர்!

வெள்ளி விழா கண்டிருக்கும் அந்த சிலை, இன்றைக்கு ‘பேரறிவுச் சிலை’யாக *(Statue of Wisdom)* வள்ளுவத்தின் புகழ் பரப்பி நிற்கிறது. ‘தமிழரசு’ இதழ் வள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு, சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது. பக்கங்களைத் திருப்பத் திருப்ப புலப்படும் பல புதிய தகவல்கள் நம்மை வியக்கச் செய்கின்றன. ஆளுமைகளும், அழகியலும், குறள் குறித்த படங்களும், ஓவியங்களும், அரிய பல தகவல்களும் கொண்ட இம்மலர் முழுக்க குறள் மணம் வீசுகிறது.

திருக்குறள் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளதைப் போலவே இந்த மலரும் ‘அறம்-பொருள்-இன்பம்’ என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர், மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி போன்ற அரசியல் ஆளுமைகள் சிலை குறித்து, ஆற்றிய புகழ் மாலை, ‘அறம்’ என்ற பகுதியிலும். கு.அழகிரிசாமி, பிரமிள், போன்ற இலக்கியவாதிகளும், பல்துறை நிபுணத்துவம் கொண்ட ஆய்வாளர்களும், அறிவுஜீவிகளும், எழுத்தாளர்களும் திருக்குறளின் பெருமையையும், வள்ளுவரின் ஆளுமையையும், சிலை அமைத்த கலைஞரின் திறன்களையும் விளித்து எழுதியுள்ள கட்டுரைகள் ‘பொருள்’ என்ற பகுதியிலும்.

சிலை மூலமும் சொல் மூலமும் குறளின் புகழ் பரப்பிய கலைஞர் குறித்தும், குறள் குறித்தும் கவிஞர்கள் பலர் எழுதிய கவிதைகள் ‘இன்பம்’ என்ற பகுதியிலும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் இம்மலருக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தி இதன் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.

> இலக்கியம் - இலக்கணம் - வரலாறு - அரசியல் - பண்பாடு எனப் பல்வேறு பார்வைகளில் இம்மலரில் உள்ள கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இலக்கியம்-இலக்கணம்-வரலாறு-அரசியல்-பண்பாடு எனப் பல்வேறு பார்வைகளில் இம்மலரில் உள்ள கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. குறளும் வள்ளுவரும் சிலையும், சிலை அமைத்த கலைஞரும், சிலை செதுக்கிய கணபதி ஸ்தபதியும் இந்நூல் முழுக்க நிறைந்துள்ளார்கள்.

பல நூற்றாண்டு கால தமிழ் நாகரிக முதிர்ச்சியின் சின்னமாகத் திகழும், திருவள்ளுவர் சிலையின் சிறப்புகளைப் பறைசாற்றும் இவ்வெள்ளி விழா மலர், திருக்குறள் நூலைப் போலவே அனைவரது இல்லங்களையும் நிறைக்கும் அத்தனை தகுதிகளையும் கொண்டு வெளியாகியிருக்கிறது.

...வாசிப்போம்.

## நம்ம ஊரு வரலாறு? — முரசொலி மாறனின் முதல் படி!

19.11.1955 அன்று சென்னை, கோகலே மண்டபத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில்தான் முரசொலி மாறன் அவர்கள் தஞ்சை மாவட்ட மாணவ அமைப்பாளராக பேரறிஞர் அண்ணாவால் நியமனம் செய்யப்பட்டார். மாநாட்டுப் பொருளாளராகவும் இவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்மாநாடே முரசொலி மாறனின் அரசியல் நுழைவின் முதல் படி!

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131